# தமிழகத்து மறுவாழ்வு முகாம்களும் கல்வி நிலையும்

**By**

***உமாரோஸ்லின், லா., & **மேரி சுபா செல்வராணி, சு.**

**முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர், பதிவு எண்: 22212014022008, தமிழாய்வு மையம், ஏ.பி.சி, மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அங்கிகாரம் பெற்றது, திருநெல்வேலி, தமிழ்நாடு, இந்தியா.*

***உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழாய்வு மையம், ஏ.பி.சி, மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி, தமிழ்நாடு, இந்தியா.*

**ஆய்வுச்சுருக்கம்**

*மனித வாழ்வில் கல்வி முதன்மை பெறுகின்றது. இலங்கையில் ஏற்பட்ட இனக்கலவரம் காரணமாக தமிழகம் நோக்கி புலம்பெயர்ந்துள்ள மக்கள் மறுவாழ்வு முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இம்முகாம் மக்கள் 40 ஆண்டு கால தமிழக வரலாற்றில் குறிப்படத்தகுந்த இடம் பெற்று வருகின்றனர். முகாம் மாணவரின் கல்விக்காக மாநில அரசால் முன்னெடுப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் செய்யும் கல்விச்சேவைகள், தொடக்ககால கல்விசிறப்பு. உயர் கல்வி பெறுவதில் உள்ள சிக்கல்கள், குடியுரிமை அற்ற நிலையில் கல்விக்கற்றும் அதற்கேற்ற வேலையில் அமர முடியாத நிலை, போட்டித்தேர்வில் பங்கு பெற இயலாத நிலை, விளையாட்டுத்துறையில் சாதிப்பதில் உள்ள தடைகள் ஆகியவைப்பற்றி இக்கட்டுரை ஆராய்கின்றது.*

***கலைச்சொற்கள்:*** *மறுவாழ்வு முகாம்கள், கல்வி, குடியுரிமை, இனக்கலவரம். புலம்பெயர்வு*

## முன்னுரை

மனிதன் தன் வாழ்வில் சிறப்புற்று விளங்க கல்வி முக்கியத்துவம் பெறுகின்றது. வளரும் இந்தியாவில் மாணவர்கள் கல்வி சிறந்து விளங்க மத்திய மாநில அரசுகள் பல்வேறு வளர்ச்சிப் பணிகளைச் செய்து வருகின்றன. இந்நிலையில் இலங்கையில் சிங்களர் - தமிழர் மக்களிடையே இனக்கலவரம் நடைபெற்றது. இதில் தமிழர்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டனர். இதனால் தமிழர்கள் தங்களின் உயிரைப் பாதுகாத்து கொள்வதன் பொருட்டு பல்வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்தனர். பெரும்பாலான தமிழர்கள் தங்களின் முன்னோர்களின் தாயகமான தமிழகம் நோக்கி புலம்பெயர்ந்தனர். அவ்வாறு புலம்பெயர்ந்தவர்கள் தமிழகத்தில் 40 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். அவர்களின் வாழ்வில் பல்வேறு மாற்றங்களையும் சந்தித்து வருகின்றனர். அவற்றில் ஒன்றான கல்வி பெறுவதில் உள்ள மாற்றங்களையும் சிக்கல்களையும் ஆராய்கின்றது இக்கட்டுரை.

## மறுவாழ்வு முகாம்கள்

இலங்கையில் 1983 ஆம் நிகழ்ந்த இனக்கலவரத்தின் காரணமாக தமிழர்கள் எந்தவித பாதுகாப்பும் அற்ற நிலையில் தமிழகம் நோக்கியும் புலம்பெயர்ந்தனர். "நான்கு கட்டங்களாக (1983-1987, 1989-1991, 1996-2005, 2006-2007) ஏறக்குறைய மூன்று இலட்சம் அகதிகள் தமிழகம் வந்திருக்கின்றார்கள்" (தகிப்பின் வாழ்வு, தொ, பத்தினாதன், ப-75) அவர்கள் தமிகத்தில் 108 முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். இந்த முகாம்களின் எண்ணிக்கையில் தேவையின் பொருட்டு அவ்வப்போது மாற்றங்களும் செய்யப்படுகின்றன. அகதிகள் முகாம்கள் என்று அழைக்கப்பட்டு வந்த இம்முகாம்கள் தற்போது 'மறுவாழ்வு முகாம்கள்' என்று

தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களால் பெயர்மாற்றம் செய்யப்பட்டது. தான் பட்ட துன்பம் என் பிள்ளைகள் படக்கூடாது என்றால் தன் பிள்ளை கல்வியில் உயர வேண்டும் என்பது தான் அனைத்து பெற்றோர்களின் எண்ணமாக இருக்கின்றது. இம்முகாம்களின் பெற்றோரும் இதற்கு விதிவிலக்கன்று.

**கல்வியின் முக்கியத்துவம்**

சமுதாயத்தில் ஓர் ஆற்றல் மிக்க உறுப்பினராக விளங்க வேண்டுமானால் சமூகமதிப்புகள், குறிக்கோள்கள், நம்பிக்கைகள்,விருப்பங்கள், பழக்கவழக்கங்கள் பண்பாடு போன்றவற்றை விதைக்க வேண்டும் என்பது கல்வியாளர்களின் கருத்தாக இருக்கின்றது. தன்னைச் சார்ந்த சமுதாயத்திற்கு தன்பங்களிப்பை செய்ய கல்வி துணைபுரிய வேண்டும். கல்வியின் சிறப்பபை

**“ஒருமைக்கண் தான் கற்றகல்வி ஒருவற்கு**

**எழுமையும் ஏமாப் புடைத்து”**

என்று குறள்(398) எடுத்துரைக்கின்றது. ஒரு பிறவியில் தான் கற்ற கல்வி ஒருவற்கு ஏழு பிறப்புக்கும் தொடரும் என்ற பொருளில் அமைகின்றது. இந்த அளவு முக்கியத்துவம் வாய்ந்த கல்வியை முகாம்களில் உள்ள மாணவர்கள் பெறும் பொருட்டு பல்வேறு முன்னெடுப்புகளை தமிழக அரசும் OFFER (Organization for Eelam Refugees Rehabilitation) சேசு சபை அகதிகள் சேவை போன்ற தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் செய்து வருகின்றன.

**முகாம்களில் தொடக்கக்கல்வி நிலை**

முகாம் வாசிகள் பெரும்பாலானோர் இனக்கலவரங்களில் தங்கள் உடைமைகள் அனைத்தையும் இழந்தனர். அவற்றோடு அவர்களின் ஆவணங்களும் அழிக்கப்பட்டன. தொடக்க கால நிலையில் “தமிழகத்தில் முகாம் வாழும் மக்களிடம் ஆவணங்கள் இல்லாமையால் வாய்மொழி அடிப்படையிலே ஈழத்தமிழர்கள் பள்ளிக்கூடங்களில் சேர்க்கப்பட்டார்கள்.” (தகிப்பின் வாழ்வு தொ. பத்தினாதன். ப-51) முகாம்களில் அங்கன்வாடி மையங்கள் உள்ளன. பள்ளி செல்லும் ஆறு வயதுக்கு மேற்பட்ட அனைவரும் உள்ளாட்சி பள்ளிகளில் 5 கி. மீட்டர் சுற்றளவில் சேர்ந்து கல்வி கற்று வருகின்றனர். மேலும் “பல தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் முகாம் குழந்தைகள் மற்றும் இளைஞர்களுக்கு மாலை வகுப்புகள் மற்றும் முகாம்களுக்கள் கட்டப்பட்ட கல்வி மையங்களில் திறன் பயிற்சி மூலம் கல்வி கற்பிக்க உதவுகின்றன. அன்னை மேரி அறக்கட்டளை ஒரு கல்வி மையத்தை உருவாக்கியது. மற்றும் முகாம் குழந்தைகளுக்கு மாலை வகுப்புகளில் கற்பிக்க முகாமில் இருந்தே ஆசிரியர்கள் நியமித்தது.” (ஆனையூர் முகாம், ஆய்வு, ஸ்ரீதரன்) தொடக்கநிலையில் கல்வி கற்பதில் அதிக சிக்கல் அற்ற நிலையில் மாணவர்கள் கல்வியை நல்ல முறையில் பெறுகின்றனர் என்பதை ஆய்வுகள் வழி அறிய முடிகின்றது.

## உயர் கல்வி நிலை

வறுமையின் காரணமாக கல்வியை இடை நிறுத்தம் செய்வதை தடுக்கும் பொருட்டு பல்வேறு அரசு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. “அரசு, அரசு உதவி பெறும் பள்ளிகளில் 12 ஆம் வகுப்பு வரை முகாம்களிலும் வெளியிலும் இருக்கும் இலங்கைத் தமிழ் மாணவர்கள் கட்டணமில்லாக் கல்வி பெறுகின்றனர். பாடப்புத்தங்கள், நோட்டுப் புத்தங்கள், சீருடை, மதிய உணவு, பேருந்துச் சீட்டு, மடிக்கணினி

ஆகியவை அவர்களுக்கு இலவசமாக வழங்கப்படுகின்றன.” (அகதியின் துயரம், தமிழில்: பொ்னார்ட் சந்திரா ப-99) இக்குறிப்பின் வழி தமிழக மாணவர்கள் உயர்பள்ளிக் கல்விக்காக பெறும் அரசின் உதவிகள் முகாம் மாணவர்களுக்கும் பாகுபாடற்ற முறையில் வழங்கப்படுகின்றன என்பதை அறிய முடிகின்றது.

பள்ளிக்கல்வியை முடித்தப்பிறகு பெறும் உயர் கல்வி நிலையில் “இலங்கைத் தமிழ் மாணவர்கள் கலை, அறிவியல் கல்லூரிகளிலும் பாலிடெக்னிக் கல்வி நிலையங்களிலும் பல்கலைக்கழகங்களிலும் ஒற்றைச் சாளரமுறையில் தகுதி அடிப்படையில் இடம்பெறுகின்றனர். பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவர்களுக்காக உள்ள எல்லா மாணவர் விடுதிகளிலும் தலா ஐந்து இடங்கள் இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கென ஒதுக்கும்படி அரசு உத்தரவிட்டுள்ளது. இதனடிப்படையில் 2015-16ல் 67 மாணவர்கள் பயனடைந்துள்ளனர். உயர் கல்விக்குச் செல்வோருக்கு கல்வித் உதவிதொகையும் வழங்கப்படுகிறது.” (அகதியின் துயரம் வி.சூரியநாராயண், தமிழில்: பொ்னார்ட் சந்திரா ப-99) மேலும் அரசு உதவித்தொகையும் வழங்குகின்றது “மாண்புகு முதவமைச்சர் சட்டமன்றப் பேரவை விதி எண் 110 இன் கீழ் 27-08-2021 அன்று அறிவித்தவாறு கல்வி உதவித்தொகை 1.53 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 1261 மாணவர்கள் பயனடைந்துள்ளனர் (பொது (மறுவாழ்வு) த்துயைற கொள்கை விளக்க குறிப்பு 2022-23 தமிழ் நாடு அரசு ப-25) இதன் மூலம் முகாம் மாணவர்கள கல்வியில் குறிப்பிடத்தகுந்த முன்னேற்றம் பெற்று உயர்கல்வியைப் பெறுவதற்த அரசு பல்வேறு முன்னெடுப்புகளை செய்துவருகின்றது என்பதை அறிய முடிகின்றது. அரசின் உதவித்தொகை முகாம்வாழ் மாணவர்களுக்கு முறைப்படி சென்றடைகின்றனவா? என்பது ஒரு ஆய்விற்குரிய விடயமாக உள்ளது. முகாம்களில் உயர்கல்வி நிலையைப்பற்றி “எனக்கு தெரிந்து நாங்கள் பத்தாம் வகுப்பு முடிக்கும் போது முகாமில் இருந்து படிச்சது ஐம்பத்தி ஆறு பேர், +2 முடிக்கும் போது இருபத்தி எட்டு பேர், பிறகு காலேஜ் போனது ஒன்பது பேர்.” (ஏதிலி, ப-85) என்று குறிப்பிடுகின்றது. இதிலிருந்து பள்ளி செல்லும் மாணவ எண்ணிக்கையிலிருந்து கல்லூரி செல்லும் மாணவரின் எண்ணிக்கை மிகக்குறைவாக இருப்பதை அறியமுடிகின்றது.

அரசாங்க கல்லூரிகளில் சேர்ந்து பயில இயலாமை பற்றி தங்களது மனக்குமுறல்களை “நான் ஏன் சட்ட விரோதி குடியேறி ஆனேன்” என்ற நூலில் பள்ளி மாணவர்கள் கவிதைகளாக, கட்டுரைகளாக பதிவு செய்துள்ளனர். அதில் தாங்கள் ஆசைப்பட்ட கல்வியை கற்க இயலாத வலியை

**“சாதிக்கும் இளைஞரின் துடிப்பை**
**அகதிச் சான்றால் அடக்க!**
**எட்டாக் கனி மருத்துவப் படிப்பு!**
**தொட முடியாத சட்டப் படிப்பு**
**…அகதியின் கோரிக்கை மடல் இது.”**

(அ.சி.விஜிதரன், (தொ) நான் ஏன் சட்ட விரோதக் குடியேறி ஆனேன்?, பக்-112)

மற்றொரு பாடலில் நிறைவேறாத கனவாக உள்ள கல்வியின் நிலையை

**“கல்வியில் சாதித்தேன் - மருத்துவ**
**கல்லூரி கனவு**
**கனவாகவே மனதோடு.”**

(அ.சி.விஜிதரன், (தொ) நான் ஏன் சட்ட விரோதக் குடியேறி ஆனேன்?, பக்-101) என்று

பதிவு செய்கின்றது. இதன் மூலம் பல மாணவர்களின் கல்வி கனவாக முடிகின்றது என்பதை அறிய முடிகின்றது. அரசு உதவிகள் கிடைத்த போதிலும் குறைந்த அளவு இட ஒதுக்கீட்டாலும் பொதுப்பிரிவில் ஈழத்தமிழ் மாணவர்கள் இணைக்கப்படுவதாலும் பல மாணவரின் கல்வி தடைபடுகின்றது.

**கல்வியில் பெறுவதில் தடை**

உயர் கல்வியை அரசின் உதவியுடனும், தனியார் தொண்டு நிறுவனங்கள் உதவியுடனும் முடிக்கின்ற மாணவர்கள் அடுத்த கட்ட வளர்ச்சியான வேலைவாய்ப்பை நாட வேண்டியுள்ளது. இந்த நிலையில் சிக்கல் ஏற்படுகின்றது. குடியுரிமை இல்லாததால் "அகதி மக்களுக்கு அரசு வேலை வாய்ப்புக்கான அனுமதிகள் இல்லை. சில நேரங்களில் தகுதி இருந்தும்கூட தனியார் நிறுவனங்களில் அகதி என்ற காரணத்தினால் வேலை வாய்ப்பு மறுக்கும் சம்பவங்களும் உண்டு" (நான் ஏன் சட்ட விரோதக் குடியேறி ஆனேன் ப-159) இந்த குறிப்பின் வழி முகாம்வாழ் மக்களுக்கு தான் விரும்பும் அரசுத்துறைகளிலும், தனியார் நிறுவனங்களிலும் பணியமர இயலாத சிக்கல் இருப்பதை அறிய முடிகின்றது. மேலும் "மருத்துவ படிப்பிற்கான நுழைவுத் தேர்வு 'NEET' எழுத முடியாத நிலை உள்ளது (நான் ஏன் சட்ட விரோதக் குடியேறி ஆனேன், ப 173) தமிழ்நாடு அரசு வேலைக்கான போட்டி தேர்வு TNPSC போன்றவற்றை எழுதுவதற்கான வாய்ப்புகளும் மறுக்கப்படுகின்றன. இதனை மெய்பிக்கும் விதமாக கீழ் காணும் குறிப்பு அமைகின்றது. "ஈரோடு மாவட்டம் அரச்சலூர் அகதிகள் முகாமைச் சேர்ந்த கூலித் தொழிலாளியான ராஜா என்பவரது மகள் நந்தினி. அவள் +2 தேர்வில் 1170 மதிப்பெண் பெற்றுள்ளார். மருத்துவம் படிக்க விரும்பிய மாணவி அதற்கான கட் ஆப் 197.50 பெற்றுள்ளார் ....அந்த மாணவி அகதி என்பதால் நிராகரிக்கப்பட்டுள்ளார். கடைசி நேரத்தில் மருத்துவம் கிடைக்கமால் போனதால் அந்த மாணவியால் மற்ற படிப்புகளிலும் தேர்வாத முடியாத சூழல் ஏற்பட்டுள்ளது." (தமிழகத்தின் ஈழ அகதிகள் தொ. பத்தினாதன் ப-59 இதன் மூலம் மருத்துவம் பயிலத் தேவையான மதிப்பெண் இருந்தும் உயர் கல்வியை அடைய இயலாத நிலை இருப்பதை அறிய முடிகின்றது. இந்த நிலையில் "முகாம்களில் படிப்பு விகிதம் குறைந்துகொண்டு வருகிறது. படித்துவிட்டுக் கூலிவேலை செய்வதற்கு எதற்குப் படிக்க வேண்டும் என்ற கேள்விக்கு யாரிடமாவது பதில் இருந்தால் முதலில் என்னிடம் கூறுங்கள்" மேலது ப-58) என்பது, முகாம் மக்களின் நிலையை தன் படைப்புகள் மூலம் வெளிப்படுத்தும் படைப்பாசிரியர் தொ. பத்தினாதனின் கேள்வியாக அமைந்துள்ளது" கல்விக்கு தகுந்த வேலை கிடைக்காத சூழலில் கல்விகற்றும் என்ன பயன் என்ற கேள்வியால் பெரும்பான்மையான மாணவர்களின் கல்வி தடைபடுகின்றது என்பதை அறிய முடிகின்றது.

**விளையாட்டுத் துறையில் சிக்கல்**

கல்வி கற்கும் மாணவ மாணவியரின் பல்வேறு திறன்களை ஊக்குவிக்கும் விதமாக கலை, விளையாட்டு போன்ற துறைகள் செயல்படுகின்றன. இதில் விளையாட்டு போட்டியில் சிறந்த மாணவர்கள் தேசியஅளவில் விளையாட வேண்டுமென்றால் இந்திய குடியுரிமை இருக்க வேண்டும். இந்நிலையில் பாதிக்கப்பட்ட ஒரு மாணவி "18 வயது நிரம்பிய பெண் நான். கிரிக்கெட்டில் மிகுந்த ஆர்வம் உள்ளவள். நான் என்

கனவை நினைவாக்க ஒரு கிரிக்கெட் அகதமியில் சேர சென்றேன். அப்போது அங்கு உள்ளவர்கள் கூறிய கசப்பான ஒரு கதையைச் சொன்னார்கள். போட்டியில் விளையாட வேண்டுமென்றால் இந்திய குடியுரிமை இருக்க வேண்டுமென்று……குடியுரிமை மட்டும் எனக்கு கிடைத்திருந்தால் நான் விளையாட்டுத் துறையில் முன்னிலை பெண்மணியாக வலம் வந்திருப்பேன்…நிச்சயம்! நிச்சயம்!". (நான் ஏன் சட்ட விரோதக் குடியேறி ஆனேன் ப-189) என்று பதிவிடுகின்றாள். முகாம் வாழ் மக்களுக்கு குடியுரிமை பெற முடியாத நிலை உள்ளதால் எந்த சர்வதேச விளையாட்டுப் போட்டிகளிலும் சாதிக்க இயலாத நிலையில் இம் மாணவர்கள் உள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

இலங்கையில் நடைபெற்ற இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டு தமிழகம் நோக்கி புலம்பெயர்ந்த மக்கள் மறுவாழ்வு முகாம்களில் வசித்து வருகின்றனர். அவர்களின் வாழ்வில் பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருகின்றனர். அவற்றில் ஒன்றாக கல்வி அமைந்துள்ளது. வறுமையால் முகாம் மாணவர்கள் கல்வியை இடைநிறுத்தம் செய்வதை தடுக்கும் பொருட்டு தமிழக அரசும், தனியார் தொண்டு நிறுவனங்களும் பல்வேறு கல்வி சார்ந்த உதவிகளை செய்து வருகின்றனர். அந்த உதவித்தொகைகள் மூலமும் பெற்றோரின் வருமானம் மூலமும் கல்வியை பெற்றுவருகின்றனர். இருப்பினும், பொதுப்பிரிவில் இடஒதுக்கீடு, குடியுரிமையின்மை, அரசு வேலையில் சேர இயலாமை, கல்வி கற்றாலும் உரிய வேலையில் அமர இயலாமை போன்ற காரணங்களால் மாணவர்களின் உயர் கல்வி தடைபடுகின்றது. ஆதலால் பள்ளிக்கல்வியில் பயிலும் மாணவர் எண்ணிக்கை சிறந்த விதத்தில் காணப்பட்டாலும் உயர் கல்வி நிலையில் மிகக் குறைந்த நபர்கள் பயில்கின்றனர் என்பது இவ்வாய்வின் முடிவாக உள்ளது.

## பார்வை நூல்கள்


மஸ்தான் செஞ்சி., கே. எஸ், (2023). பொது (மறுவாழ்வு)த்துறை, கொள்கை விளக்கக் குறிப்பு, 2022-2023, தமிழ்நாடு அரசு, தமிழ் நாடு, இந்தியா.

சூரியநாராயண். வி. (2021). அகதியின் துயரம். முதல் பதிப்பு: பிப்ரவரி 2021 காலச்சுவடு பதிப்பகம், (பி)லிட்., 669, கே.பி. சாலை, நாகர்கோவில், தமிழ் நாடு, இந்தியா.

பத்தினாதன். தொ. (2019). தகிப்பின் வாழ்வு, போரும் இடப்பெயர்வும், முதல் பதிப்பு: ஜனவரி 2019, காலச்சுவடு பதிப்பகம், (பி)லிட்., 669, கே.பி. சாலை, நாகர்கோவில், தமிழ் நாடு, இந்தியா.

பத்தினாதன், தொ. (2023). தமிழகத்தின் ஈழ அகதிகள், முதல் பதிப்பு: ஜனவரி 2023, காலச்சுவடு பதிப்பகம், (பி)லிட்., 669, கே.பி. சாலை, நாகர்கோவில், தமிழ் நாடு, இந்தியா.

விஜிதரன். அ.சி. (தொ). (2023). நான் ஏன் சட்ட விரோதக் குடியேறி ஆனேன்? முதல் பதிப்பு: ஜனவரி 2023, 327/1, திவான் சாகிப் கார்டன், டி.டி.கே.சாலை, இராயப்பேட்டை, சென்னை, தமிழ் நாடு, இந்தியா.

விஜிதரண், அ.சி, (2019). ஏதிலி, இரண்டாம் பதிப்பு ஜீலை 2019, வெளயீடு: சித்தன்

புக்ஸ் 327|1 திவான் சாகிப் கார்டன், டி,டி,கே சாலை, இராயப்பேட்டை, சென்னை, இந்தியா.

இணையம் மூலம்: http://anaiyurcamp.blogspot.com/2011/06/history-of-anaiyur-camp.html.

## To cite this article

*****************

Uma Roseline, L., & Mary Suba Selvarani, S. (2025). தமிழகத்து மறுவாழ்வு முகாம்களும் கல்வி நிலையும். *Sparkling International Journal of Multidisciplinary Research Studies, 8*(1), 27-32.

*****************************************************************************************

## ABOUT THE AUTHORS



***Uma Roselin*** *is a Ph.D. scholar, Department of Tamil at APC Mahalaxmi College for Women, affiliated with Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India. She holds an M.A. and a B.Ed. degree in Tamil Literature. She secured the 6th rank in her postgraduate studies at Manonmaniam Sundaranar University.*



***Dr S. Mary Suba Selvarani*** *is an Assistant Professor, Department of Tamil at APC Mahalaxmi College for Women, affiliated with Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India, since 2007. She holds an M.A., M.Phil., and Ph.D. (NET) in Tamil Folk Literature. Currently, she is guiding four Ph.D. scholars. She has organized five seminars and workshops and has published over 18 papers in international seminars and journals.*

*****************************************************************************************